கொண்டாவது அரசாங்கமே அதற்கு மானியமாகவோ அல்லது வேறு கோயில்களின் நிதியையோ மாற்றி அளிக்க வழிவகை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அந்தத் திருமண மண்டபத்தைக் கட்ட போதுமான நிதி வசதி அந்தக் கோயிலில் இருக்கிற காரணத்தினுல் வேறு கோயிலில் இருந்து மாற்ற வேண்டிய அவசியம் இல்லே.

பழனி கோயில் திருவிழாச் செலவு.

*** 596 வின—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அறநிலேயத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடை யளிப்பாரா—

அண்மையில் பழனி கோயிலில் நடைபெற்ற கும்பாபிஷேகத் திருவிழாவுக்கு அரசு செலவிட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஏதுமில்லே.

திருத்தணி கோயிலுக்கு புதிய தேர்.

*** 597 வின—திரு. வை. பாலசுந்தரம் :** மாண்புமிகு அறநிலேயத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடை யளிப்பாரா—

திருத்தணி கோயிலுக்கு தங்கத்தேர் செய்வதற்கான செயற் குறிப்பு ஏதேனும் பரிசீலனேயில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஆம்.

திரு. வை. பாலசுந்தரம் : இப்படி தங்கத் தேர் செய்கிறபோது அரசின் சம்மதம் பெற்றுச் செய்கிருர்களா ? அல்லது கோயிலில் இருக்கிறவர்களே முடிவு செய்துகொண்டு செய்கிருர்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கோயிலில் இருக்கிற அறங் காவலர்கள் முடிவு செய்துகொண்டு, அறநிலேயத் துறை ஆணேயரின் அனுமதி பெற்று நிறைவேற்றுகிருர்கள்.